தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை; 1981 ஏப்ரல் 28.

சித்திரை 16, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்."

உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தை விட்டுவிட்டால், மொட்டை அடித்தலும், சடை வளர்த்தலும் ஆகிய புறக்கோலங்கள் வேண்டாம்.

(1) வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

மின் கட்டணத்தை உயர்த்தும் திட்டம்

*வினா எண் 309—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கட்டணத்தை உயர்த்துமாறு நமது மாநில அரசுக்குத் திட்டக் கமிஷன் ஏதேனும் ஆலோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) விவசாயத்திற்கு மொத்த மின் உற்பத்தியில் சுமார் 28 சதவிகிதம் வழங்கப்படுகிறது. ஆனால், உற்பத்தி விலை யூனிட் ஒன்றுக்கு சுமார் 45 காசாக இருக்கும்போது விவசாயத்திற்கான ஒரு யூனிட்டின் சராசரி விலையான 17 பைசா என்பது குறைவான விலையாகும். இதன் வாயிலாக மின் வாரியத்திற்கு ஆண்டுக்கு ரூ. 72 கோடி வரை இழப்பு ஏற்படுகிறது. எனவே, இது குறித்த பிரச்சனைகளை ஆழ்ந்து பரிசீலித்து மின் வாரியத்தின் நிதி நிலைமையை மேம்பாடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென திட்டக்குழு பரிந்துரை செய்துள்ளது.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் திட்டக்குழு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தில் சில ஆலோசனைகள் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏறகனவே மின் கட்டணத்தை இன்றைக்குக் கட்ட முடியாத ஒரு சூழநிலையில் விவசாயிகள் சிரமபபட்டுக் கொண்டும், நிலுவை அதிகப்படுத்துக் கொண்டும் இருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் மேலும் உயர்த்துவது சரிதானா? ஆகவே அநத ஆலோசனையைக் கூறிய மத்திய திட்டக் குழுவிடமே இந்த மாநிலத்திற்கு ஏதாவது மத்திய அரசிடம் இருந்து மானியம் பெறுவதற்கு திருப்பி ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஒரு பொது நிறுவனம் என்றால் இழபபு இலலாமல் நடைபெற வேணடும். அதோடு மட்டுமல்லாமல் அதனுடைய முதலீடுகள், அதனுடைய சொந்த நிதிகளிலிருந்தே பெற்றுக்கொள்கிற வகையில் அது நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் மின்சார வாரியம் தொடர்ந்து பல கோடிக்கணக்கான ரூபாய்களை இழப்பாகப் பெற்று வருகிற காரணத்தால் அதைச் சரிசெய்ய வேண்டும் என்று திட்டக் குழு கூறியது. அப்படிச் சரி செய்ய வேண்டுமென்று சொல்கிறபோது இந்தியாவிலேயே தமிழகத்தில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குகிற கட்டணம் மிகவும் குறைவாக இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். ஆகவே அந்தக் கட்டணத்தை உயர்த்தி நிதிநிலைமையைச் சரி செய்தால் இன்னும் திட்டங்களை அதிகமாக தமிழ்நாட்டில் நிறைவேற்றுவதற்கு வழி ஏற்படும் என்று மத்தியக் குழு நமக்குப் பரிந்துரை செய்தது. விவசாயிகளிடையே நமக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்னையை நம் அரசு சார்பில் விரிவாக எடுத்து திட்டக் குழுவிடம் விளக்கினோம்.

திரு. என். பழனிவேல்: இன்று மத்திய அரசிலும் இம்மாதிரி ஒரு மின்சார இலாக்கா, மின்சாரத் துறை அமைச்சர் என்றெல்லாம் இருக்கிறார்கள். நமக்கு இப்படி ஒரு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் பற்றாக் குறையான மின்சாரம் வைத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மத்திய அரசின் அந்த மின்சார இலாக்கா நமது மாநிலத்திற்கு உருப்படியான உதவியோ அல்லது ஆலோசனையோ ஏதாவது சொல்லுமா? அது சம்பந்தமாக நம் மாநில அரசு என்ன யோசனை கூறியுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நமக்கு உருப்படியான ஆலோசனைகள் தேவை இல்லை. நமக்குத் தேவை உதவி. அதைத் திட்டக் குழு பொறுத்தவரையில் அவர்கள் மொத்தமாக மத்திய அரசு மாநிலங்களுக்கு

எப்படி உதவி செய்ய வேண்டுமென்று வரைமுறை வைத்துக் கொண்டு உதவி செய்கிறார்கள். தனியாக மத்திய மின்சாரததுறை எந்த உதவியும் அளிப்ப தில்லை. நமது மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் 1977-78ல் ரூ. 15.67 கோடி நஷ்டம். 1978-79ல் ரூ. 23.51 கோடி நஷ்டம். 1979-80ல் ரூ. 24.56 கோடி நஷ்டம். 1980-81ல் ரூ. 108 கோடி நஷ்டம் வரும். 1981-82ல் ரூ. 142.81 கோடி நஷ்டம் வரும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு விசேஷ நிலைமை, ஏறக்குறைய 10 இலட்சம் பம்பு செட்டுகள் வைத்து நீர்ப்பாசனம் செய்து வருகிற நிலையிலே தமிழகம் இருக்கின்ற காரணத்தினால், அது ஒரு கட்டுப்படியாகாத தொழிலாக இருக்கிற காரணத்தினால், அதற்கு மின்சாரத்தை மலிவு விலையில் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கி, அதோடு ஏனைய தொழில்களை வளர்ப்பதற்கு ஒரு ஏற்பாட்டை மத்திய திட்டக் குழுவிற்கு எடுத்துச் சொல்லி, அதற்கு வேண்டிய நிதி உதவி நீங்கள் அளிக்க வேண்டுமென்று மத்திய அரசிற்குச் சொல்லுவ தோடு, நமக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்டிக் கொள்ளக்கூடிய முறையிலே, அதிக லாபம் சம்பாதிக்கின்ற தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி, இந்த விவசாயிகளுக்கு மலிவான கட்டணத்தில் மின்சாரம் கொடுப்பதுபற்றிய நியாயத்தை திட்டக் கமிஷனுக்கு நமது அமைச்சர் அவர்கள் எழுதுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே தொழில்களுக்கு விதிக்கப்பட்ட கட்டணம் அதிகம். இன்னும் சொல்லப் போனால், தொழில் துறைகளுக்குப் போடுகின்ற கட்டணம் மூலம் வரக்கூடிய அதிக வருவாயை வைத்து, இந்தமாதிரி ஏற்படும் இழப்பைச் சரிசெய்கிறோம். இன்னும் நாம் தொழில் துறைகளுக்கு அதிகக் கட்டணம் போட்டால், தொழில் களே நம் நாட்டிற்கு வராது. மத்திய அரசைப் பொறுத்தவரையில், ஒரு பொது நிறுவனம் நஷ்டத்தில் இயங்கினால் அதற்கு நிதி உதவி செய்யாது. அப்படிச் செய்ய ஆரம்பித்தால், ஒவ்வொரு மாநிலத்திலும் பொது நிறுவனம அதற்குப் பிறகு தொடர்ந்து பல கோடி ரூபாய் நஷ்டமாகக்கூடிய நிலைமையில் நடத்தப்பெறும். இன்னொரு கருத்தையும் தெளிவாக்க விரும்புகிறேன். விவசாய உணவு உற்பத்தி பம்பு செட்டுகளை வைத்து ரொம்ப விசேஷமாகச் செய்வதாகச் சொன்னார்கள். நாம் இதிலேகூட சில அடிப்படை உண்மை களைத் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பங்கினர் பம்பு செட்டுகள் வைத்துப் பயிர் செய்கிறார்கள். மற்றவர்கள் கிணற்றுப் பாசனம், ஏரிப் பாசனத்தை நம்பி பயிர் செய்கிறார்கள்.

ஆகவே, மூன்றில் ஒரு பங்கினர்தான் பம்பு செட்டு வைத்து விவசாயம் செய்கிறார்கள். பம்பு செட்டு வைக்க முடியாதவர்கள், கவலை மூலம் விவசாயம் செய்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயத்திற்கு உரிய கட்டணத்தை விதிப்பது பற்றி நாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக திட்டக் கமிஷன் ஏதாவது யோசனை கூறியிருக்கிறதா ? குறிப்பாக இன்னும் உயர்த்த வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறதா ? அதன்மீது அரசு உயர்த்துவதென்று முடிவு செய்து விட்டதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நஷ்டமில்லாமல் நடக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எது எது நஷ்டத்தில் இயங்குகிறது என்பதை ஆராய்ந்து, அதற்குத் தேவையானபடி உயர்த்தலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்திற்கான மின் கட்டணத்தை தமிழ்நாட்டிலே உயர்த்துகின்ற ஒவ்வொரு நேரத்திலும், நாம் எவ்வளவு சட்டம் ஒழுங்குப் பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னோம். இருந்தாலும், அவர்கள் சொல்வது, இக் கட்டணம் மிகவும் குறைவாக இருக்கிறது, நீங்கள் உயர்த்தினால் ஒழிய எதிர்காலத்திலே முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சாத்தியமில்லை என்று அவர்கள் திரும்பச் சொல்லிவிட்டார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு சார்பில் தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 910—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) நெல்லை, குமரி மாவட்டங்களின் மலை ஓரப்பகுதியில் துவங்க அரசு முன்வருமா ?